# February 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு 30 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சந்தை வாய்ப்பைத் திறக்கும்; இந்திய விவசாயிகளை பாதிக்கும் எந்த அம்சமும் ஒப்பந்தத்தில் இடம்பெறாது என மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

(i) இந்தியாவின் ரூ.4 லட்சம் கோடி மதிப்பிலான பொருள்கள் பரஸ்பர கூடுதல் வரியின்றி அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

(ii) இந்தியா-அமெரிக்கா இடையிவான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல் திட்டம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக இரு நாடுகளும் கூட்டாக அறிவித்தன.

(iii) இந்த ஒப்பந்த செயல்திட்டத்தின் கீழ், இந்திய பொருள்கள் மீது விதிக்கப்பட்ட பரஸ்பர கூடுதல் வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைக்கும். இது, ஜவுளி, ஆயத்த ஆடைகள், தோல், காலணிகள், பிளாஸ்டிக், ரப்பர் பொருள்கள், கரிம ரசாயனங்கள், வீட்டு அவங்காரப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், குறிப்பிட்ட இயந்திரங்கள் உற்பத்தித் துறைகளுக்கு மிகப்பெரிய சந்தை வாய்ப்பை அளிக்கும்.

(iv) மேலும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொது மருந்துகள், ரத்தினங்கள், வைரங்கள், விமான பாகங்கள் உள்ளிட்ட பல பொருள்களுக்கு இறக்குமதி வரியிலிருந்து அமெரிக்கா முழுமையாக விலக்கு அளிக்க உள்ளது. அதன்முலம், சுமார் ரூ.4 லட்சம் கோடி (44 பில்லியன் டாலர்) மதிப்பிலான இந்திய பொருள்கள் பரஸ்பர வரி ஏதுமின்றி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

(v)அதோடு மக்காச்சோளம், கோதுமை, அரிசி, சோயா, கோழி, பால், சீஸ், எத்தனால், புகையிலை, சில காய்கறிகள் மற்றும் இறைச்சி உள்ளிட்ட விவசாய மற்றும் பால் பொருள்களை முழுமையாகப் பாதுகாப்பதன் மூலம் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், கிராமப்புற வாழ்வாதாரத்தை நிலை நிறுத்துவதற்கும் இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்த ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது.

(vi) குறிப்பாக இந்திய ஆப்பிள் உற்பத்தியாளர்களை முழுமையாகப் பாதுகாக்கும் வகையில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆப்பிள்களுக்கு ஒதுக்கீடு அடிப்படையிலேயே வரிச் சலுகை அளிக்கப்பட உள்ளது. முன்மொழியப்பட்டுள்ள இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆப்பிள்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.80 குறைந்தபட்ச இறக்குமதி விலை (எம்ஐபி) நிர்ணயிக்கப்படும் என்பதோடு, 25 சதவீத இறக்குமதி வரியும் விதிக்கப்படும். அதன்படி, அமெரிக்காவிலிருந்து கிலோ ரூ.100-க்கும் குறைவான விலையுடைய ஆப்பிள்களை இறக்குமதி செய்ய முடியாது.

(vii) அமெரிக்காவிலிருந்து கிலோ ரூ. 75-க்கும் குறைவான விலையுடைய ஆப்பிள்கள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுக்கும் வரையில், எம்ஐபி ஒரு கிலோ ஆப்பிளுக்கு ரூ.50-ஆக நிர்ணயம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதோடு. இறக்குமதி வரி 50 சதவீதமாக விதிக்கப்படுகிறது. எனவே, இந்திய ஆப்பிள் விவசாயிகள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவர். எந்தவித கவலையும் தேவையில்லை என்று குறிப்பிட்டார்.

(viii) மேலும், இந்த இடைக்கால ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ரூ.2.7 லட்சம் கோடி (30 பில்லியன் டாலர்) மதிப்பிலான தொழிலாளர் சார்ந்த துறைகளில் உற்பத்திசெய்யப்படும் பொருள்கள் மீது 18 சதவீத வரி விதிப்பை அமெரிக்க தொடர உள்ளது.

(ix) அதே நேரம், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எஃகு அலுமினியம், தாமிரம் மற்றும் குறிப்பிட்ட வாகன பாகங்கள் உள்பட சுமார் ஒரு லட்சம் கோடி (12 பில்லியன் டாவர்) மதிப்பிலான பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரி விகிதத்தில் எந்தவித மாற்றமும் இருக்காது. அதாவது, 50 சதவீத வரி விதிப்பே தொடர உள்ளது.

(x) இந்தியா-அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் வகையில் இறுதி செய்யப்பட்ட செயல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :-

- பொது மருந்துகள், ரத்தினங்கள், வைரக் கற்கள், விமான பாகங்கள் உள்பட பரவலான இந்திய பொருள்களுக்கு முழுமையான இறக்குமதி வரி விலக்கை அமெரிக்கா அளிக்கும்.
- அமெரிக்காவின் அனைத்து தொழில் நிறுவன உற்பத்திப் பொருள்கள் மற்றும் பரவலான வேளாண் பொருள்களுக்கு இந்தியா இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்யும் அல்லது வெகுவாகக் குறைக்கும்.
- பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் தொடர்ச்சியான அடிப்படையில் முன்னுரிமை சந்தை அணுகலை இரு நாடுகளும் வழங்கும்.
- வர்த்தக ஒப்பந்தத்தின் பலன்கள் இரு தரப்புக்கும் பிரதானகக் கிடைப்பதை உறுதிசெய்யும் மூல விதிகளை இரு நாடுகளும் உருவாக்கும்.
- இருதரப்பு வர்த்தகத்தை பாதிக்கும் வரியில்லா தடைகளை நீக்க இருதரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளும். குறிப்பாக, அமெரிக்க மருத்துவ உபகரணங்கள் வர்த்தகத்துக்கு உள்ள நீண்ட கால தடைகளுக்குத் தீர்வு காணவும், சந்தை அணுகலைத் தாமதிக்கும் இறக்குமதி உரிம நடை முறை தடைகளை நீக்கவும் இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.
- ஒப்புக்கொள்ளப்பட்ட வரிகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், மற்ற நாடு தனது உறுதிப்பாடுகளை மாற்றியமைக்கலாம் என்று இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பேச்சுவார்த்தைகள் மூலம் சந்தை அணுகல் வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- மூன்றாம் தரப்பினரின் சந்தை அல்லாத கொள்கைகளால் ஏற்படும் பாதிப்பை எதிர்கொள்ள ஒருமித்த நடவடிக்கைகள் மூலம் விநியோகச் சங்கிலி மீள்திறன் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்தி பொருளாதார பாதுகாப்பை வலுப்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.
- அமெரிக்காவிடமிருந்து அடுத்த 5 ஆண்டுகளில் 500 பில்லியன் டாலர் (ரூ.45 லட்சம் கோடி) மதிப்பிலான விமானம், விமான பாகங்கள், மதிப்புமிக்க உலோ கங்கள், தொழில்நுட்பம், சமையல் நிலக்கரி உள்ளிட்ட பொருள்களை இந்தியா வாங்க திட்டமிட்டுள்ளது.
- கிராஃபிக்ஸ் பிராசசிங் யூனிட்கள், தரவு மையங்களில் பயன்படுத்தப்படும் பிற பொருள்களின் வர்த்தகத்தை கணிசமாக அதிக ரிக்கவும், கூட்டு தொழில்நுட்ப மேம்பாட்டு ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.
- எண்ம (டிஜிட்டல்) வர்த்தகத்துக்கு பாகுபாடு காட்டும் அல்லது சுமையாக உள்ள ஒழுங்கு நடைமுறைகள் உள்ளிட்ட தடைகளுக்குத் தீர்வுகாண ஒப்புக் கொளப்பட்டுள்ளது.
- இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்யும் நோக்கில், இந்த இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பணிகளில் இருதரப்பும் தீவிரமாக ஈடுபடும்.

2. ஆசியாவின் முக்கிய நாடுகளான ஜப்பான் மற்றும் தாய்லாந்தில் புதிய அரசைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத்தேர்தல் ஞாயிற்றுக்கிழமை (பிப். 8) நடைபெறுகிறது.

(i) ஜப்பான் :-

- ஜப்பானில் முதல் பெண் பிரதமர் சனே தகாய்ச்சியின் செல்வாக்கைத் தீர்மானிக்கும் தேர்தலாகவும், தாய்லாந்தில் புதிய அரசமைப்புச் சட்டத்துக்கான பொது வாக்கெடுப்புடன் கூடிய தேர்தலாகவும் இவை அமைந்திருப்பதால், உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.
- ஜப்பான் நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையில் உள்ள 465 இடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது. முந்தைய 2024 தேர்தலில் சனே தகாய்ச்சியின் ஆளும் விடுதலை ஜனநாயகக் கட்சி (எல்டிபி) மற்றும் அதன் கூட்டணிக்கு குறைந்த அளவு பெரும்பான்மையே கிடைத்தது. குறிப்பாக, மேலவையிலும் அவர்களுக்குப் போதிய பலம் இல்லாத சூழல் நிலவுகிறது.
- இந்நிலையில், கடந்த அக்டோபரில் பிரதமராகப் பொறுப்பேற்ற சனே தகாய்ச்சி, தனது அரசுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவைக் கொண்டு, நாடாளுமன்றத்தில் கட்சியை வலுப்படுத்த முன்கூட்டியே தேர்தலை அறிவித்தார்.

- மக்களிடையே சனே தகாய்ச்சிக்குத் தனிப்பட்ட செல்வாக்கு இருந்தாலும், அவரது எல்டிபி கட்சி பல விமர்சனங்களை எதிர் கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் மத்திய சீர்திருத்தக் கூட்டணியுடன் பலப்பரீட்சை நடத்துகிறது.
- இருப்பினும், எல்டிபி கட்சிக்கே பெரும்பான்மை கிடைக்கும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

(ii) தாய்லாந்த :-

- தாய்லாந்தில் கடந்த ஆண்டு டிசம்பரில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையில் உள்ள 500 இடங்களுக்கான தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.
- இந்தத் தேர்தலோடு சேர்த்து, ராணுவ ஆட்சியில் 2017-இல் உருவாக்கப்பட்ட சட்டத்தை ரத்து செய்துவிட்டு, புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவது குறித்த பொது வாக்கெடுப்பும் நடத்தப்படுகிறது.
- தற்போதைய பிரதமர் அநுதின் சர்ன்விராகுல் தலைமையிலான பூம்ஜெய்தாய் கட்சி, முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் செல்வாக்கு மிக்க பியூதாய் கட்சி, இளைஞர்களின் ஆதரவு கொண்ட மக்கள் கட்சி ஆகிய வற்றுக்கு இடையே மும்முனைப்போட்டி நிலவுகிறது.
- தேர்தல் முடிவில், எந்தவொரு தனிக்கட்சியும் ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை யை (251 இடங்கள்) கைப்பற்றாது எனக் கூறப்படுகிறது. இதனால் அங்கு ஒரு கூட்டணி அரசு அமையவே அதிக வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.
- முன்பு, பிரதமர் தேர்வில் ராணுவத்தால் நியமிக்கப்பட்ட செனட் (மேலவை) உறுப்பினர்களுக்கும் அதிகாரம் இருந்தது. ஆனால், இம்முறை அவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்பது ஜனநாயகத்துக்குப் பெரும் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு முடியும்வரை, தாய்லாந்தில் மது விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

3. மணிப்பூரின் சுராசந்த்பூரில் இரண்டு நாள்களுக்குப்பின் இயல்பு நிலை திரும்பத் தொடங்கியது.

(i) குகி சமூகத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் சுராசந்த்பூர் மாவட்டம் துய்போங் பகுதியில் புதிய அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்தநிலையில், தற்போது இயல்புநிலை திரும்பத் தொடங்கியது.

(ii) மணிப்பூரில் மைதேயி, குகி சமூகத்தினர் இடையிலான மோதல் காரணமாக 2 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை நிலவியது. இதில் சுமார் 260 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர்.

(iii) இந்த வன்முறை காரணமாக கடந்த ஆண்டு பிப். 9-ஆம் தேதி மாநில முதல்வர் பதவியை பாஜகவை சேர்ந்த பிரேன் சிங் ராஜிநாமா செய்தார்.

(iv) இதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு பிப்.12-ஆம் தேதிமுதல் அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி கடந்த 4-ஆம் தேதி விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில், மணிப்பூரில் புதிய அரசு அமைக்கப்பட்டது. பாஜகவை சேர்ந்த யும்நாம் கெம்சந்த் சிங் முதல்வராக பதவியேற்றார்.

4. சத்தீஸ்கர் மாநிலம், பஸ்தர் மாவட்டத் தலைநகரான ஜக்தால்பூரில் மூன்று நாள்களுக்கு நடைபெறும் வட்டார அளவிலான 'பஸ்தர் பண்டும்' திருவிழாவை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்

5. அமெரிக்காவின் 118 பில்லியன் டாலர் (சுமார் ரூ.10.70 லட்சம் கோடி) மதிப்பிலான ஜவுளி மற்றும் ஆடைகள் சந்தைக்கு இந்திய ஏற்றுமதியாளர்கள் பெருமளவு ஏற்றுமதி செய்வதற்கான மிகப் பெரிய வாய்ப்பை, இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது.

(i) இந்தியா-அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்த செயல்திட்டம் இறுதி செய்யப்பட்டிருப்பதாக இருநாடுகளும் சனிக்கிழமை கூட்டாக அறிவித்தன.

(ii) இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய ஜவுளித் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில், ‘இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒப்பந்தம் இருநாட்டு ஜவுளி வர்த்தக உறவை மேம்படுத்துவதில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

(iii) அமெரிக்காவில் ஜவுளி மற்றும் ஆடைகளின் சந்தை மதிப்பு 118 பில்லியன் டாலர்களாகும். அவற்றைப் பிற நாடுகளில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்கிறது. அந்நாட்டுக்கு சுமார் 10.5 பில்லியன் டாலர் (சுமார் ரூ.95,000 கோடி) மதிப்பிலான ஜவுளி மற்றும் ஆடைகளை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. இந்த ஏற்றுமதியில் ஆடைகளின் பங்கு 70 சதவீதமாகும். இந்நிலையில், அந்நாட்டுக்கு ஜவுளி மற்றும் ஆடைகள் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க, தற்போதைய ஒப்பந்தம் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஜவுளி, ஆடைகள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியை 2030-ஆம் ஆண்டுக்குள் 100 பில்லியன் டாலராக (சுமார் ரூ.9 லட்சம் கோடி) அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு இந்த ஒப்பந்தம் மிக முக்கிய பங்காற்றும்.

(iv) அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருள்கள் மீதான பரஸ்பர வரியை 18 சதவீதமாக குறைத்ததன் மூலம், இந்திய ஜவுளிப் பொருள்கள் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் பாதகமான நிலை நீங்கும். ஜவுளி ஏற்றுமதியில் இந்தியாவுக்குப் போட்டியாக வங்கதேசம், சீனா, பாகிஸ்தான், வியத்நாம் உள்ளிட்ட நாடுகள் உள்ள நிலையில், பரஸ்பர வரி குறைப்பால் ஜவுளி ஏற்றுமதியில் அந்த நாடுகளைவிட சிறந்த நிலையை இந்தியா எட்டும்' என்று தெரிவிக்கப்பட்டது.

(v) இந்தியா - அமெரிக்கா இடையிலான இடைக்கால வர்த்தக ஒப்பந்த செயல் திட்டம் குறித்த விவரத்தை இருநாடுகளும் வெளியிட்டதைத் தொடர்ந்து, இந்திய வரைபடம் ஒன்றை அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகம் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டது. அந்த வரைபடத்தில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரையும் சேர்த்து ஒட்டுமொத்த ஜம்மு-காஷ்மீர் பிராந்தியமும் இந்தியாவுக்குச் சொந்தமான பகுதியாக இடம்பெற்றுள்ளது. இதேபோல சீனா உரிமை கொண்டாடும் அக்சாய் சின் பிராந்தியமும் இந்தியாவுக்குச் சொந்தமான பகுதியாக அந்த வரைபடத்தில் இடம்பெற்றுள்ளது. முன்பு வெளியிடப்பட்ட இந்திய வரைபடங்களில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரும், அக்சாய் சின் பிராந்தியமும் இந்தியப் பகுதிகளாக இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

6.ஹொரைசன் ஐரோப்பா' அறிவியல் ஆய்வுத் திட்டம் குறித்து ஐரோப்பிய யூனியன்-இந்தியா இடையே பேச்சுவார்த்தை தொடங்கியது.

(i) எல்லை கடந்த அறிவியல் ஆய்வு மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் 93.5 மில்லியன் யூரோ மதிப்பில் முன்மொ மியப்பட்டுள்ள ழியப்பட்டுள்ள இத்திட்டத்தின் அம்சங்கள் குறித்து பேச்சு வார்த்தை தொடங்கப்பட்டதாக 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது.

(ii) கடந்த மாதம் 27-ஆம் தேதி நடைபெற்ற 16-ஆவது ஐரோப்பிய யூனியன்-இந்தியா உச்சி மாநாட்டில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டி ஏ) இறுதிசெய்யப்பட்டது.அப்போது வர்த் தகம், பாதுகாப்பு, அறிவியல், புத்தாக்கம் உள்ளிட்ட துறைக ளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவுசெய்யப் பட்டது.

(iii) இதையடுத்து, ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட செய்திக் குறிப்பில், ஐரோப்பிய யூனியன் - இந்தியா இடையே ஹொரை சன் ஐரோப்பா ஆய்வுத் திட்ட முன்னெடுப்பு குறித்து கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது.

(iv) இந்த திட்டம் அமலாகும்பட்சத்தில் இந்திய ஆய்வாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஐரோப்பாவில் இருந்து நேரடியாக நிதியுதவி வழங்கப்படும். அதேசமயம் இந்தியாவும் இத்திட் டத்துக்கு குறிப்பிடத்தக்க நிதியை ஒதுக்கீடு செய்யும்.

(v) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திட்டங்களில் ஐரோப்பா மற்றும் இந்திய ஆய்வாளர்கள் ஒன்றிணைந்து செயல்படவும் இருதரப்பிடையே நீண்டகால ஒத்துழைப்பை வலுப்படுத்த வும் இத்திட்டம் வழிவகுக்கும்' எனத் தெரிவிக்கப்பட்டது. *

(vii) தற்போது 22 நாடுகளுடன் ஹொரைசன் ஐரோப்பா அறி வியல் ஆய்வுத் திட்டத்தின்கீழ் ஐரோப்பிய யூனியன்

ஒன்றி ணைந்து செயல்பட்டு வருகிறது.

7. பிரதமர் மோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக மலேசியாவுக்கு வருகை தந்தார்.

விமான நிலையத்தில் பிரதமர் மோடியை மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமணன் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நேரில் வரவேற்றனர்.

(i) இந்திய வம்சாவளி மலேசிய குடிமக்களுக்கு 6-ஆம் தலைமுறை வரை 'இந்திய வம்சாவளி குடிமகன்' குடிமகன்' (ஐஓசி) அட்டை வழங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. விரைவில் இங்கு யுபிஐ சேவைகள் தொடங்கப்படும்.